**கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், செங்கல்பட்டு**

**MCOP.No.8/2022 R.W.1**

(சாட்சிக்கு திரு.V.பிரதாப், உதவியாளர் அவர்களால் சாட்சி பிரமாணம் செய்யப்பட்டது)

| | |
|---|---|
| பெயர் | பவித்ரா |
| க/பெ. | செல்வகுமார் |
| வயது | 36 |
| வசிப்பிடம் | மோட்டார் வாகன ஆய்வாளர் பகுதி அலுவலகம், திருக்கழுக்குன்றம். |
| தொழில் | உதவியாளர் |

**முதல் விசாரணை 26.11.2025**

நான் நீதிமன்ற அழைப்பாணையின் பேரில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். திருக்கழுக்குன்றம் மோட்டார் வாகன ஆய்வாளர் அவர்களுக்கு அனுப்பப்பட்ட அழைப்பாணையை பெற்று அவர் என்னை சாட்சி சொல்ல உத்தரவு வழங்கி கொடுத்த அங்கீகார கடிதம் எ.ம.சா.ஆ.1. அந்த அழைப்பாணையில் மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கை TN-19-AC-6069 மற்றும் TN-19-M-3058 என்ற வாகனங்களின் மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கை சமர்ப்பிக்கும்படி உத்தரவு வழங்கப்பட்டது. அதன்படியே அவற்றை தாக்கல் செய்கிறேன். அவைகள் முறையே எ.ம.சா.ஆ.2 மற்றும் எ.ம.சா.ஆ.3 ஆகும்.

(மனுதாரர்கள் தரப்பு குறுக்கு விசாரணைக்காக ஒத்தி வைக்கப்படுகிறது)